போது ஸ்டோன் ஹவுஸ் ஹில் என்ற இடத்தைக் கேட்டிருக்கிறோம். அது தகுதியான இடம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். அந்த இடம் கிடைத்த பிறகு மாணவர் விடுதி கட்டுவதன் மூலமாக விடுமுறைக் காலத்தில் பயணிகள் அங்கு தங்கும் வகையில் புதிய திட்டம் இருக்கிறது.

கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுலம்.

வினா—*444 :திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம்-மகராஜபுரம், கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுலத்திற்கு நமது அரசு செய்துவரும் உதவிகள் யாவை ?

(இ) இந்தக் குரு குலத்திற்கு மேலும் உதவிகள் செய்யும் செயற் குறிப்பு எதுவும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :
(அ) வேதாரண்யம், மகராஜபுரத்திலுள்ள கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுல அனாதை இல்லம் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளி ஒன்றினையும், அனாதை இல்லம் ஒன்றினையும் நடத்தி வருகிறது. கீழே விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளவாறு, மானிய உதவி விதிக் கோவையில் விதித்த முறைகளுக்கிணங்க இந்த நிலையங்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை வழங்குகிறது.

		சிறுவர்களுக்கான விடுதி.	உயர்நிலைப் பள்ளி.
1966-67	..	ரூ. 8,631	ரூ. 1,157.
1967-68		ரூ. 6,917	ரூ. 1,334.

கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கருவிகள் முதலியவற்றை வாங்குவதற்கான மானியமாக 1967-68-ல் ரூ. 4,400 வழங்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

Another dam across Cauvery near Mettur Dam.

*445—*Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal before the Government for the construction of another dam across the river cauvery either at the upstream or at the downstream of Mettur Dam ?

மு.ப
9-39 மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. நா. காசிராமன் : மழை காலங்களில் அதிகமாக வருகிற தண்ணீர் கடலில் விடப்படுகிறது. ஆகவே, ஹொகனக்கல்—மேட்டூருக்கு இடையே நடுவில் ஒரு அணை கட்டி அத் தண்ணீரைத் தேக்கினால் மழை இல்லாத காலத்தில் அது பயன்படுமென்று முன்பு பொதுவாகப் பேசப்பட்டு வந்ததே, அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு மேற்புறத்தில் ஹொகனக்கல் அருகில் ஓர் அணையைக் கட்ட சில தொடக்க ஆய்வு வேலைகளை மேற்கொள்ளப்பட்டன கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பாசன வசதி ஒன்றும் கிடையாது.